# படைகுறைபாடுகளைநீக்குமாறுஜனாதிபதிஉத்தரவு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 26 இதழ் 206
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11 – 9 – 1993

(கொழும்பு)
பாதுகாப்புப் படையின ருக்குத் தேவையான சகல வற்றையும் உடனடியாக வழங்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பாதுகாப்பு இணை இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.
(4-ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் புலிகளின் கை ஓங்கியிருக்கிறது

(நியாட்)
இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கி இருக்கிறது என்று சவூதிஅரேபியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.
நியாட் டெய்லி என்ற இப்பத்திரிகையின் செப் 2-ம் திகதி வெளியீற்றில் வெளியான ஆசிரியர் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.
(4-ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் கடற்படை கப்பல் கொழும்பில் தரிப்பு

(கொழும்பு)
பிரான்ஸ் கடற்படையின் பாரிய யுத்தக்கப்பல்களில் ஒன்றான கொமாண்டன்போறி கடந்த 8-ம் திகதி முதல் கொழும்பு துறை முகத்தில் தரித்து நிற்கிறது.
இக்கப்பல் நாளை 12ம் திகதி வரை அங்கு தரித்து நிற்கும்
(4-ஆம் பக்கம் பார்க்க)

## ● யாழ்ப்பாணம் மீது

# ஒரு தாக்குதல் நடைபெற்றால்
# 5 லட்சம் பேர் பாதிக்கப்படுவர்

## பி. பி. ஸி. நிருபர் கணிப்பு

(லண்டன்)
யாழ் குடாநாட்டை தாக்க படையினர் திட்டம் தீட்டியுள்ளதாக விடுதலைப்புலிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. அப்படி ஒரு தாக்குதல் நடக்குமானால் சுமார் ஐந்துலட்சம் மக்கள் வரை பாதிக்கப்படுவார்கள் என்று பி.பி.ஸி.யின் கொழும்பு முகவர் சியாக்கா நோஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய அவர் பி. பி. ஸிக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது.

விடுதலைப் புலிகள் வரட்டும் ஒருகை பார்த்து விடுவோம் என்று போருக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின ரின் தலையைக் கண்டதும் தமிழர்கள் வீடுவாசல்களை விட்டு ஓடிவிடுகிறார்கள்

இராணுவத்தை விட மேலான பாதுகாப்பு கொண்டது எனக் கருதி அவர்கள் புலிகள் உள்ள பகுதிகளில் தஞ்சமடைகிறார்கள்.

இலங்கை அரசுப்படைகளை தமிழ் மக்கள் இன்னமும் நம்பத் தயாராக இல்லை என்பதைக் காட்டும் மேலும் ஒரு அறிகுறியாக இதனைக் கூறலாம்.

இலங்கைப் படையில் சிங்களவரின் கையே மேலோங்கியுள்ளது. பல அக்கிரமங்களை அவர்கள் புரிந்திருக்கிறார்கள் இதனாலேயே அவர்கள் மீது யாழ். மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை.

பத்தாண்டுக் கால போரில் அழிந்து சிதைந்த அழிவு சின்னங்கள் யாழ்ப்பாணத்தில்
(4-ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி தாக்குதலில் மூன்று புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூன்று போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

லெப். ஆனந்தன் முருகேசம்பிள்ளை (சரவணபவன், காரைநகர்), லெப். சிவம் (சின்னையா கமலேஸ்வரன்- கோப்பாய்), லெப். தனம்பாரன் (தங்கராசா சதீஸ்வரன், யாழ்ப்பாணம்) ஆகியோரே வீரச்சாவை அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்
(4-ம் பக்கம் பார்க்க)

### லலித் படுகொலையை விசாரிக்க

## பாரபட்சமற்ற விசாரணைகுழு நியமிக்கப்படவேண்டும் சிறிமாவோ

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் படுகொலை குறித்து விசாரணை செய்வதற்கு பாரபட்சமற்ற ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசார் லலித் அத்துலத் முதலியின் படுகொலை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அவரது படுகொலை தொடர்பாக புதிய சந்தேகங்கள் எழுந்துள்ளதால் பாரபட்சமற்ற ஒரு விசாரணை நடத்தி அந்தக் கொலை குறித்து ஆராயவேண்டும் என திருமதி பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். —இ

### பூநகரிப்பாதை விவகாரம்

## மூத்தரப்பு ஒப்பந்தத்தை இலங்கை அரசு மறுப்பு

(கொழும்பு)
பூநகரி சங்குப்பிட்டி பாதை ஊடாக பொதுமக்கள் பயணம் செய்வது சம்பந்தமாக அரசு எவருடனும் எந்த ஒரு ஒப்பந்தமும் செய்யவில்லையென்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற ஒப்பந்தங்கள் எதுவும் செய்யும் நோக்கம் அரசுக்கும் கிடையாது என்று நேற்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

மேற்படி பாதை சம்பந்தமாக விடுதலைப்புலிகள்- ஐ.நா அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம்-அரசும் மூத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றில்
(4ம் பக்கம் பார்க்க)

### ஐ. நா. ஸ்தாபனம்

## இலங்கை அகதிகளுக்கு 23 கோடி டொலர் உதவி

(கொழும்பு)
இலங்கையிலுள்ள அகதிகளுக்காக 23 கோடி 40 ஆயிரம் டொலர் பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு ஐ. நா. அகதிகளுக்கான ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இலங்கையில் தற்போது பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகளுக்கு மேலும் ஒருவருடத்துக்கு மேற்படி தொகையை
(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படை நடவடிக்கைக்கு ஏழு படகுகள் கொள்வனவு

(கொழும்பு)
கடற்படையைப் பலப்படுத்தும் வகையில் ஏழு பீரங்கிப் படகுகள் இவ் வருடத்தில் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் மூன்று பீரங்கிப் படகுகள் வாங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்றும் இவை இம்மாத நடுப்பகுதியில் இலங்கை வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை வடபகுதி கடலில் அண்மையில் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய இரு பாரிய தாக்கு
(4-ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ்.பல்கலைக்கழக 13வது பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழகத்தின் 13வது பட்டமளிப்பு வைபவம் இன்று 11ந் திகதி சனிக்கிழமை காலை 9-30மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது

துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா தலைமையில் இந்தப் பட்டமளிப்பு விழா மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த 641 பட்டதாரிகள் பட்டம் பெறவிருக்கின்றனர்.

முதலாவது அமர்வில் முதுமெய்யியல்மாணி முதுகலைமாணி, பட்டப்பின் கல்வி
(4-ம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளியில் 53 வீடுகள் படையினரால் தீமூட்டி எரிப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பு வெல்லாவெளி ரெட்பான தமிழ் கிராமத்தில் 53 வீடுகள் படையினரால் தீமூட்டி எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

கடந்த 8-ந் திகதி இரவு இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த 53 வீடுகளும் எரித்து நாசமாக்கப்படுவதற்கு முதல்நாள் அதிரடிப்படையினரால் கோபாலபிள்ளை என்ற ஒடும்பஸ்தர் கிராமத்தில் வைத்து அடித்து சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்
(4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### வியாபாரிகளுக்கு

நூல், லேஸ், சில்வர், கோல்ட் கவறிங் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (எ-3400)

### ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்

ஐம்பத்திஐந்து ரூபாவுக்கு ஓர் உணர்ச்சிகரமான சமூக நாவல். பத்திரிகை விற்பனையாளர்களிடம் பெறுங்கள். வியாபாரிகளுக்கு கழிவுண்டு. பூபாலசிங்கம், மகிமிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-441)

### விற்பனைக்கு

ஆண், பெண் பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; "கோமதி", பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி. (சி-453)

### நிம்மதி தரும் நீம்

நுளம்புத் தொல்லை எமக்கு இல்லை. நீம் சுகாதார தூபம் புகைத்து நிம்மதியாக நித்திரை செய்வோம் இயற்கை வளம் கொண்டே தயாரானது நீம் சுகாதார தூபம். பக்கற் ஒன்று ரூபா 3/- 25 பக்கற் கொண்ட ஒரு அட்டை ரூபா 60/- அனைத்து கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது.

— "மிக்கவைத்"

(எ-3405)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

பட்டப்பின் டிப்ளோமா பொது நர்வாகம்

## முதலாம் அரையாண்டுப் பரீட்சை-1993

மேற்படி பரீட்சை 11 - 10 - 93 தொடக்கம் 16 - 10 - 93 வரை நடைபெறவுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து உதவிப் பதிவாளர்/பரீட்சைகள் அலுவலகத்தில் 25-09-93 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்.

(ஏ-3413)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் விளங்கிய தோழர் எச். என். பெர்னாண்டோவின் நினைவாக இலங்கை ஆசிரியர் சங்க யாழ். கிளையினரும், வடமாகாண ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்தும் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம)

0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவகுருநாத பீடத்தில் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4-30 மணிக்கு பிரம்மஸ்ரீ இ. வெங்கடேசசர்மாவால் 'உபநிடத விளக்கம் ரிஷிகளின் வரலாறும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (ம)

## சில்வா ஜோச் வேக்ஸ்

### விசேட அறிவித்தல்

நீண்டகாலமாக எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சகல வேலைகளையும் மனத்திருப்தியுடன் செய்துவந்த வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம்மிடம் இதுகாலம்வரையும் மணிக்கூடுகளைத் திருத்தக்கொடுத்தவர்கள் அதற்கான ரசீதுகளை தவறவிட்டவர்கள் (இடம் பெயர்வு காரணமாக) தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

திருப்தியின் சின்னம் சில்வா ஜோச் வேக்ஸ்

ஞானமுத்து செபஸ்ரியன்

அன்னை வேளாங்கண்ணி,

15, 1ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

(ஏ-3411)

## வாழ்த்துகிறோம்

இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலந்து பட்டம் பெறும் சகல பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

# சித்ராலயா

18, ஸ்ரான்லி வீதி (ஆர்க்கேட் வீதி),

யாழ்ப்பாணம்.

குறிப்பு:

எம்மிடம் மஞ்சள் (YELLOW), கறுப்பு (BLACK), பல்கலைக்கழக மேலங்கிகள் (CLOAK) உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி 451)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும்

## ஒன்பது மாத கால விவசாய பயிற்சி நெறி 1993/94

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாதகாலப் பயிற்சி நெறி அளிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகைமைகள்:- (1) விண்ணப்பதாரர் க. பொ. த (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

(2) க. பொ. த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல் பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

### விண்ணப்ப முடிவு திகதி:- 16-9-93

அனுப்ப வேண்டிய முகவரி:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
யாவட்ட செயலகம்,
கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவ முறையில் தயாரித்து அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல்வேண்டும்.

குறிப்பு:- (1) மேற்படி பயிற்சி நெறியைக் கற்று முடிப்பதற்கான செலவுகளும், உணவும் இலவசம்.

(2) விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 17-09-93 காலை 9-00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தவறாது சமுகமளித்தல்வேண்டும். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர்: ..............................
2. நிரந்தர முகவரி: ..............................
..............................
3. தற்போதைய முகவரி: ..............................
..............................
4. பிறந்த திகதி: ..............................
வயது: ..............................
5. கல்வித் தகைமை: ..............................
..............................
6. விவசாய அனுபவங்கள்: ..............................
7. தந்தையின் முழுப் பெயர்: ..............................
,, முகவரி: ..............................
,, தொழில்: ..............................
8. குடும்ப மாத வருமானம்: ..............................
9. வேறு தகைமைகள்: ..............................

மேற்கூறிய தகவல்கள் யாவும் சரியானவையெனவும், உண்மையானவையெனவும் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து பயிற்சி முடியும் வரை தொடர்ந்து பங்குபற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

திகதி: ........................ ..............................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

(எ-3416)

**மணிவாக்கு**

அதிசயம் அனும் உண்மை. உண்மை என்றுமே விசித்திரமானது. கற்பனையை விடவும் அற்புதமானது.

— பைரன் பிரபு.

# நமது நோக்கு

## பிரித்தானியா பங்கு என்ன?

அனைத்துலக அங்கீகாரத்துடன் தமிழர் சுயநிர்ணய உரிமை பெற பிரித்தானியப் பிரதமர் ஜோன்மேஜர் உதவவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழர்களின் சர்வதேசக் கூட்டிணைப்புக் குழு விடுத்துள்ளது.

இதுபோன்ற கோரிக்கையை ஏற்கனவே 15க்கு மேற்பட்ட அமைப்புக்கள் விடுத்துள்ளன.

பிரித்தானியாவிடம் இக்கோரிக்கை விடுக்கப்படுவதன் தாற்பரியம் என்ன?

இலங்கையில் பல அரசுகள் இருந்தன. போர்த்துக்கேயர், டச்சுக்காரர் இலங்கையின் சில பகுதிகளைக் கைப்பற்றி இருந்தாலும், இலங்கையை ஒரே நாடாகக் கணித்து ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவந்த பெருமை பிரித்தானியருக்குத்தான் உண்டு.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே!

தமது நிர்வாக வசதிக்காக, இரு இனங்களையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள்.

ஆனால், இந்த உண்மையை மூடிமறைத்து, இலங்கை முழுவதும் பௌத்த சிங்களவருக்கே உரியது என்ற எண்ணம் தெற்கிலே வளர்க்கப்பட்டு வருகின்றது!

வரலாற்று உண்மைகளை எளிதிலே மூடிமறைத்து விடலாமா?

இலங்கை பற்றிய வரலாற்றுச் சான்றுகள், ஆவணங்கள் பிரித்தானிய தொல்பொருள் பாதுகாப்பு நிலையங்களிலும், சுவடிக் காப்பகங்களிலும் இன்றும் பேணப்பட்டு வருகின்றன.

உதாரணத்திற்கு ஒன்று!

"மிகப் பழங்காலம் தொடக்கம் இரு தேசிய இனங்கள் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டுவந்தன. வளவு ஆற்றுப் பகுதியிலிருந்து இலாபம் வரையான தென் மேற்குப் பகுதியிற் சிங்களவரும், வட கிழக்குப் பகுதியில் தமிழரும் ஆட்சி புரிந்தனர்."

இது யாருடைய கூற்று? ஏன் கூறப்பட்டது?

சேர் ஹியூ கிளேக்கோர்ன் பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பான செயலாளராக (அமைச்சர்) கடமையாற்றினார். இலங்கை பற்றிய அவரது அரச ஆவணத்தில் (Gleghorn Minute 1799 ஜூன் மாதத்திலேயே வெளியிட்ட ஆவணத்தில் இதனைக் குறிப்பிட்டார்.

எனவே தமது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைந்த இலங்கையின் இனப் பிரச்சனையின் தீர்வுக்குப் பிரித்தானியாவின் பங்கு வரலாற்றுக் கடப்பான தாகும்!

## இன்று நினைவுதினம்:
# பாரதி சாகாவரம் பெற்ற ஒரு சரித்திரக் கவிஞர்

பாரதி ஒரு புதுமைக் கவிஞன் என்று மற்றைய கவிஞர்களிடம் இருந்து அவரைப் பிரித்து நோக்கக் காரணம் அவர் விடுதலை வேள்வியில் தனது கவிதைகளால், நாட்டு மக்களுக்கு வேகமும் விறுவிறுப்பும் ஊட்டியமையாலாகும்.

"சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமை—செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்" என்று தமிழ் அவரைச் சாகாவரம் பெற்ற சரித்திரக் கவிஞராக ஆக்கியுள்ளது. பாரதி ஓர் இலட்சியக் கவிஞர் அவருடைய கவிதைகள் இனவிடுதலைக்காக போராடும் ஓர் இனத்தின் அணிவகுப்புப் பாடலாகும். பாரதி காலத்தால் தோற்றுவிக்கப்பட்டவர். காலத்தின் கண்களையே திறந்தவர் அவர் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்தவர்.

இவருடைய கவிதைகள் சமுதாயத்தின் ஒட்டுமொத்த முழு விடுதலைக்கு நிதர்சனமான பார்வையைக் காட்டுகிறது. மண்ணடிமை, பெண்ணடிமை என அடிமை விலங்குகள் ஒழியவேண்டும், மனிதன் அச்சமில்லை, அச்சமில்லை எனக் கைகொட்டி நிற்கவேண்டும் என்ற இலட்சிய வெறி கொண்டு கவிதையில் ஓர் சொற்போர் தொடுத்தவர்.

தனிமனிதன் தலைநிமிர்ந்து சுதந்திரமான வாழ்வு வாழ்ந்து, அதனால் அவன் வாழ்வு வளம்பெற்று சமூகம் சிறந்து சீருற்று சமூகச் செழிப்பு சமுதாய மலர்ச்சியாகி, நாடு நலம்பெற்று உலக அரங்கிலே தன் சிந்தனையைச் செம்மாந்து நிலைநாட்டி தானும் ஆன்மீக அரசாட்சியில் பங்குகொள்ளும்நிலை ஏற்படவேண்டும் என்பதே பாரதி கண்ட இலட்சியக் கவிக்கனவாகும். தனிமனிதனில் ஊறிநின்ற அவர் கவிதை தாரணியைத் தழுவியது. உரிமைக் குரலை எழுப்பிய அவர் கவிதை உலகப் பொது நோக்கையும் வளர்த்தது. அவர் முழுமையான கவிஞர் முடிவில்லாத இலக்கியப் பயணம் அவர் கவிதையாகும்.

அச்சத்தையும், அடிமை வாழ்வையும் நீக்கி ஆண்மையுடன் தனது உரிமையை வென்றெடுக்க ஒவ்வொரு தனிமனிதனாலும் முடியும் என்ற இலட்சிய உறுதியை ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் ஓடச் செய்தவர் பாரதி.

இலட்சிய வேட்கைகொண்ட மனிதன் சாதிக்க முடியாதது தான் என்ன?

'மண்ணில் தெரியுது வானம் அது நம் வசப்படலாகாதோ' என்ற வீர முரசின் ஒலி இதற்கு விடையாகும். பாரதி காட்டிய பாதையில் அறிவைச் செலுத்தி ஆக்கம் கொண்டு ஆண்மையுடன் போராடி புதியதோர் உலகம் காண்போம் வாருங்கள் என்பதாகும் அவரது பார்வை இலட்சியத்தால் நிறைந்தது.

நாட்டில் மக்கள் அனைவரும் இந்த நாட்டின் மன்னர்கள் என்ற முழக்கத்தைச் செய்த பாரதியின் இலட்சியக் கனவு நமது இலட்சியப் போரை வென்றெடுக்க வழி சமைக்கட்டும்.

—த. டேனியல்.

# இன்று போர் உலா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கப்டன் மலரவன் (லியோ) எழுதிய "போர் உலா" வெளியீட்டுவிழா பரியோவான் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இன்பன் தலைமை தாங்குகிறார். மலரன்னை ஈகைச்சுடரேற்றுவார். விடுதலைப்புலிகள் மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா உருவப்படம் திறந்து வைக்க மகளிர் மாணவ அமைப்பு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி வாசுகி வரவேற்புரை நிகழ்த்துவார்.

"போர் உலாவை" வெளியிட்டு வைக்கின்றார் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன். தமிழீழ விடுதலைப்புலிகள் துணை இராணுவ தளபதி பால்ராஜ் பெறுகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையை நிகழ்த்துகின்றார்.

சிறப்புரை, மதிப்புரைகளை டாக்டர் ஜெயகுலராசா, திரு. தமிழ்ச்செல்வன், பேராசிரியர் சண்முகதாஸ் திருமதி கோகிலா மகேந்திரன், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்துகிறார்கள். நன்றியுரையை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்துகிறார்.

—ம-சி

## இராசிபலன்

11-09-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 26)

தசமி மாலை 6-40 வரை, திருவாதிரை மு. ப. 10-24 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 9-03 முதல் 10-33 வரை, சுபநேரம் காலை 8-03 முதல் 4-33 வரை,

(4-ஆம் பக்கம் பார்க்க)


TACEP 93 - இறுதித் தேர்வு

நாள்: 12-09-93 ஞாயிறு-

நேரம்: பி. ப. 2 மணி.

இடம்: பலாலி ஆசிரிய கலாசாலை. திருநெல்வேலி.

சோ. பத்மநாதன்

மாநில TACEP இணைப்பாளர்.

(சி 452)



தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் எமது தலைமைச் செயலகத்திற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

கல்வித் தகைமை: ஆகக் குறைந்தது 8ம் வகுப்பு

அல்லது

அனுபவம்: ஆகக் குறைந்தது 2 வருடங்கள்.

வயது: 35 முதல் 55 வரை.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சான்றிதழ்களுடனும், சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் செப்டம்பர் மாதம் 14ம் திகதி (14-09-93) காலை 10 மணியிலிருந்து 1 மணி வரையில் நேரில் வரவும்.

மாவட்டச் செயலாளர்,

யாழ். மாவட்ட

வேக்சரி உரிமையாளர் சங்கம்.

மணிபல்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி 449)



அறிவித்தல்

இதன்கீழ் விளக்கப்படுவதும் 01-09-93 முதல் அமுலில் இருந்து வருவதுமான எமது அங்கத்துவ சங்கங்களின் பெயர் மாற்றங்கள் இக்கூட்டுறவு அமைப்புக்களோடு தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரதும் அறிதலுக்கும், தொடர்புகளுக்குமானதாகும்.

| 31-08-93 வரை | | 01-09-93 முதல் | |
|---|---|---|---|
| 01. பருத்தித்துறை - புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் | | பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் | |
| 02. வலி கிழக்கு (வ. ப) | „ | அச்சுவேலி | „ |
| 03. கட்டைவேலி - உடுப்பிட்டி | „ | கரவெட்டி | „ |
| 04. வலி கிழக்கு (தெ. ப.) | „ | கோப்பாய் | „ |
| 05. யாழ் மாநகர | „ | யாழ்ப்பாணம் | „ |
| 06. அரியாலை | „ | அரியாலை | „ |
| 07. சாவகச்சேரி | „ | சாவகச்சேரி | „ |
| 08. தென்மராட்சி கிழக்கு | „ | கொடிகாமம் | „ |
| 09. பச்சிலைப்பள்ளி | „ | பளை | „ |
| 10. கோண்டாவில் - இணுவில் | „ | கோண்டாவில் | „ |
| 11. சுன்னாகம், [illegible], மல்லாகம் | „ | சுன்னாகம் | „ |
| 12. தெல்லிப்பழை | „ | தெல்லிப்பழை | „ |
| 13. மானிப்பாய் [illegible] | „ | மானிப்பாய் | „ |
| 14. பண்டத்தரிப்பு - பரிஷ் | „ | பண்டத்தரிப்பு | „ |
| 15. வட்டு தொகுதி | „ | சங்கானை | „ |

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(எ 3415)

### இனப்பிரச்னைக்கான

# தீர்வை தாமதப்படுத்துவது அபாய விளைவை ஏற்படுத்தும்

## அரசியல் நிபுணர் எச்சரிக்கை

(சிட்னி)

அரசாங்கம் இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு காலதாமதப்படுத்துவது மேலும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தவே வழிவகுக்கும் என்று வெளிநாட்டு அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அரசியல் ரீதியாக இனப்பிரச்னை தீர்வுக்கான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அனைத்துமே அசமந்தபோக்கை கொண்டவையாக காணப்படுகின்றன. தெற்கில் அரசியல்வாதிகள் பாரிய பிரச்னையான இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதை விடுத்து எதிர்க்கட்சிகளிடையேயான பிரச்னைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பவர்களாக காணப்படுகின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்னையைப் பொறுத்தவரையில் எதனைத் ... இந்த நிலையும் அந்த நிலையிலிருப்பது புலிகளின் கரங்களை ஓங்கவே செய்யும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் பத்திரிகை யொன்றில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

---

### கடற்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் மோகன் சமரசேகரவுக்கு பணித்துள்ளது. (ரி)

---

### இராசிப்பலன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேடம்: புதிய முதலீடு, தொழில் உறவு, மகிழ்ச்சி.

இடபம்: மேசபை வார்த்தை, தொழில் நஷ்டம், யோசனை.

மிதுனம்: காரிய சித்தி, மதி நுட்பம், பயணம்.

கடகம்: மன வெறுப்பு, குடும்ப பிரிவு, அச்சம்.

சிம்மம்: கல்விச் சிறப்பு, தயாள சிந்தை, சகோதர உதவி.

கன்னி: தேடியது கிட்டும். பண வரவு, மனைவி பெருமை.

துலாம்: பகைவர் துரோகம், அகால போஜனம், பண முடை.

விருச்சிகம்: உடல் நோய், பழைய பிரச்னை, மனச்சஞ்சலம்.

தனுசு: தொழில் பாராட்டு, தற்பெருமை, சுபகாரியம்.

மகரம்: இனசன உதவி, உல்லாசம், பெண் கலை.

கும்பம்: வாக்கு தவறுதல், பெரியோர் பழி, காரியதடை.

மீனம்: வீண்வம்பு, வீட்டில் சிக்கல். நெஞ்சு வலி.

ஜோஸ்யர்

---

# பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்த கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்துவதற்கான கடன் திட்டம் ஒன்றினை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

பாதிப்படைந்த வீட்டின் பகுதியைத் அமைத்தல், புதிய வீடு ஒன்றை அமைத்தல், பாதிப்படைந்த வீட்டை திருத்தம் செய்தல் போன்றவற்றிற்காக ஆகக்கூடுதலான தொகையாக ரூபா 50,000 குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்.

இந்தக் கடன் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது குடும்பப் பதிவு அட்டையைக் காண்பித்து யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் இதற்கு வேண்டிய விண்ணப்பப்படிவங்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. —162-ரி

---

### வெல்லாவெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் நடத்திய இப் படுகொலையைத் தொடர்ந்து அச்சத்தின் காரணமாக வீடுகளிலிருந்து தமிழர் வெளியேறி அருகிலுள்ள கோவில் ஒன்றில் தஞ்சம் புகுந்தனர்.

கோவிலில் தஞ்சம் புகுந்தவர்கள் மறுநாள் தமது வீடுகளுக்கு சென்றதும் எரித்து சாம்பலாக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். —ரி

---

### இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இலங்கையில் மேற்கொண்டுவரும் அதிரடி தாக்குதல்கள் உலகில் எந்தப் பகுதியிலும் எந்தத் தீவிரவாதிகளாலும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இத்தாக்குதல்கள் சிறீலங்காவின் ஒவ்வொரு பகுதியிலும் தாக்கங்கள் ஏற்படுத்தியுள்ளது என்று அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளினால் சிறிலங்காவின் பொருளாதாரம் அசைவற்று நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மைக் காலங்களில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிராக நடத்திய கரும்புலித் தாக்குதல்களையும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (ரி)

---

### படைத்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு—கிழக்கு யுத்த முனையில் கடமை புரியும் படையினருக்குத் தேவையான உணவு உடை போன்றவற்றை எந்தவிதத் தடையுமின்றி வழங்குமாறும் அவர்களது குறைபாடுகளை நேரில் சென்று அறிந்து அவற்றுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறும் ஜனாதிபதி அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு மேலும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவுக்கமைய அடுத்து அமைச்சர் கிழக்குப் பகுதியிலுள்ள பல படை முகாம்களுக்கு நேரடியாக விஜயம் செய்து படையினரின் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார். —இ-ரி

---

### இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திரசிகிச்சை மாணி, சித்தமருத்துவ சத்திரசிகிச்சை மாணி, வர்த்தகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வில் கலாநிதி விஞ்ஞானம் முதுவிஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி, தொழில் நிர்வாகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

மூன்றாவது அமர்வில் கலாநிதி கலை (கலைமாணி, இசைக்கலைமாணி நடனக்கலைமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும். (162-ரி)

---

### பூநகரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திட்டுள்ளார்கள் என்று நேற்று கொழும்பு பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்திக்கு அரசு மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்தது.

நாட்டில் பந்தோபஸ்து நலன் சம்பந்தப்பட்ட எந்த ஒரு தரப்புடனும் எந்தவித மான உடன்பாடும் அரசு செய்துகொள்ளாது. பொது மக்களுக்கு நன்கு விளக்கமளிக்கப்பட்டபின்பே எந்த ஒரு தரப்புடனும் அரசு ஒப்பந்தம் செய்வது பற்றி ஆலோசனை நடாத்தும்.

சட்டபூர்வமாக உருவாக்கப்பட்ட அமைப்புகளுடன் மட்டுமே அரசு ஒப்பந்தங்களை செய்துகொள்ளும் அதுவும் ஒப்பந்தங்கள் பற்றி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் ஒப்புதல்கிடைத்த பின் ஒப்பந்தங்களை அரசு செய்து கொள்ளும் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (வி-ரி

---

### சித்தமருத்துவ மாணவர்கள்

# சத்தியாக்கிரகத்தை தற்காலிகமாக நிறுத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை ... திலிருந்து நீக்கப்பட்ட யாழ் துணைவேந்தரின் கீழ் நேரடியாகவே இவ்விவகாரத்தினை நடைமுறைப்படுத்தப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் ஏ.பி.ஆர். அனுமதி உறுதியளித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை தலைவர் எஸ் பவானிக்கு இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர்கள் தாம் மேற்கொண்டிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்றுமுதல் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும் விரிவுரைகளைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பதாகவும் ... ஆணைகள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வரும்வரை இந்தப் பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். —இ

---

# வடபகுதி அடுத்த வருடம் அரசுகட்டுப்பாட்டின்கீழ் வருமாம்

(கொழும்பு)

அடுத்த வருட முற்பகுதியில் வடபகுதி அரசின் முழுக் கட்டுப்பாட்டினுள்ளும் வரும் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்—இந்த வருட இறுதிக்குள் கிழக்கு மாகாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வரும். கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டினுள் வந்ததும் அங்கு தேர்தல்கள் நடைபெறும் எனவும் கூறினார்.

இதற்கிடையில் கிழக்கு மாகாணம் இம்மாத இறுதிக்குள் படையினரின் முழுக் கட்டுப்பாட்டினுள் வந்துவிடுமென ஏற்கனவே ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. —இ-ரி

---

# ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி வந்த ஹெலிகொப்டர் ஒன்று கொக்குவில் பகுதியை உள்ளடக்கி பல தடவைகள் வட்டமிட்டு வேவு பார்த்துச் சென்றது.

நேற்று பகல் 11-30 மணிக்கு வந்த ஹெலிகொப்டர் சுமார் 12 மணி வரை வட்டமிட்டுச் சென்றது.

இதேவேளை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் புக்காரா விமானம் ஒன்று வட்டமிட்டுச் சென்றது. (56-59-ரி)

---

### ஐ. நா. ஸ்தாபனம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பொருட்களாக வழங்குமென்று ஐ. நா. அகதிகளுக்கான ஸ்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார். (வி-ரி)

---

### யாழ்ப்பாணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றனர். புகழ்பெற்ற யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாகி அழிந்து கிடக்கிறது. அதேபோல டவுன் கணக்கில் பனைப் பல கட்டிடங்களும் உருக்குலைந்து கிடக்கின்றன. யாழ் கோட்டைப் பகுதி முழுவதும் ஷெல்களும், குண்டுகளும் தாக்கியதால் ஏற்பட்ட வடுக்களைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் இப்போது சைக்கிள்வண்டிதான் சர்வ சாதாரணமான போக்குவரத்து சாதனம். ஏனென்றால் ஸ்ரீலங்கா அரசு அங்கு மூன்று வருடகாலமாக பொருளாதாரத் தடையை அமுல்படுத்தி வருகின்றது.

புலிகளின் போர்த்திறனை அடக்கும் நோக்குடன் அரசு இப்படி ஒருதடையைப் போட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாண மக்களில் மிகப்பலர் பெரும்பான்மையினரான தென்பகுதி சிங்களவர் ஆதிக்கத்திலிருக்கும் அரசினரால் யாழ் பகுதி மக்கள் மீது விதிக்கப்பட்ட கூட்டு தண்டனை இதுவெனக் கருதுகிறார்கள்.

இரவில் யாழ். பகுதியே இருளில் மூழ்கி விடுகிறது ஏனெனில் யாழ்ப்பாணத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. இதனால் தகவல் தொடர்புச் சாதனங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இராணுவம் கண்டபடி ஷெல் தாக்குதல்களை நாவாந்துறைகளிலிருந்தும் மேற்கொண்டபின் அந்தப் பகுதிகளை வந்து ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். (இ-ரி)

---

### பிரான்ஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்படுகிறது.

2100 தொன்கள் எடையுள்ள இக்கப்பலானது 103 மீற். நீளமும் 12 மீற். அகலமும்கொண்டதுடன் 26 நொட்ஸ் கடல் வேகத்தையும் கொண்டுள்ளது.

ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட இக்கப்பலானது 38 நாட்கள் எந்த விநியோகங்களுமின்றி கடலில் தங்கி நிற்கக் கூடியதாகும்.

ஆசிய நாடுகளில் பிரான்ஸ் கொண்டுள்ள பூகோள ரீதியான அக்கறையைபிரதிநிதித்துவப்படுத்துவதும் யுத்த தளபாட உதவிகளை வழங்குவதும் இக்கடற்படைக் கப்பலின் முக்கிய செயற்பாடுகளாகும்;

கடற்படை படகுகளை கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் தளத்தில் விரைவாக தயாரிக்க ஏதுவான விநியோகங்களை மேற்கொள்ளவே கொமாண்டர் பேமறி எனப்படும் பிரான்ஸ் போர்க்கப்பல் கொழும்பில் தரித்துள்ளதாக கூறப்படுகிறது. (ரி)

---

### பூநகரி தாக்குதலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லெப் தனம்பாரனின்பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக நேற்று யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி உரைகளையடுத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் விதைக்கப்பட்டது.

லெப். அனந்தன், லெப். சிவம் ஆகியோரின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மூளாய் சித்றூர் செயலகத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். அதனை தொடர்ந்து மூளாய் சங்கானை வீதியூடாக சோணிச் சந்தி, மருதனாமடம் வீதியூடாக உரும்பராய்ச் சந்தியை வந்தடைந்து பின் அங்கிருந்து உரும்பராய், கோப்பாய் வீதியூடாக மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 1-30 மணிக்கு இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் விதைகுழியில் விதைக்கப்படும். —ரி

---

### 2வது டெஸ்ட் கிரிக்கெட்

# இனிங்ஸ் வித்தியாசத்தால் இலங்கை படுதோல்வி

(கொழும்பு)

இலங்கைக்கும் - தென்னாபிரிக்காவுக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், தென்னாபிரிக்கா, இன்னிங்ஸாலும் 208 அதிகப்படியான ஓட்டங்களாலும் மகத்தான வெற்றி பெற்றது.

1953-ம் ஆண்டு தென்னாபிரிக்கா, நியூஸிலாந்தை இன்னிங்ஸாலும் 180 ஓட்டங்களாலும், வெற்றி பெற்ற பின்பு தென்னாபிரிக்காவுக்கு டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த மாபெரும் வெற்றி இதுவாகும்.

ஸ்கோர் விபரம் இலங்கை: 168, 119. தென்னாபிரிக்கா: 495.

3-வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14-ம் திகதி செவ்வாய்க்கிழமை, கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (வி)

---

**உற்பத்தியைப் பெருக்கிடுவோம்**

**ஊக்கமாய் உழைத்திடுவோம்**

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/B: